2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# பதிற்றுப்பத்தில் அரசர் புலவர் உறவுகள்

**சி.கலியமுர்த்தி**

**முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,**

**தமிழியற்புலம்.**

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -21.**

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியல் பதிவுகளைத் தரும் சிறந்த நூலாகும். இலக்கியம் தான் மனித குலத்தின் முத்திரைகளை அறியக்கூடிய பொக்கிசமாக கருதப்படுகிறது. அந்த வகையில் சங்க காலத்தில் வாழ்ந்த சேர, சோழ, பாண்டியரை பற்றிய குறிப்புகள் பண்டையத் தமிழரின் நூல்களில் மட்டுமல்லாது கல்வெட்டுகள், பட்டயம், செப்பேடுகள், சுதைபொருட்கள், தொல்பழங்கால சிற்பங்கள்,ஓவியங்கள் இவற்றின் மூலம் நம் முன்னோர் பற்றிய பல விதமான தகவல்கள் நமக்கு கிடைக்கின்றன. சங்ககால இலக்கியத்தில் சேரர்களுக்கு என்று ஒரு வரலாற்றுப் பதிவினைக் கொண்ட நூல் பதிற்றுப்பத்தாகும். இந்நூல் சேர மன்னர்களின் வாழ்வியல் சமூகப் பண்பாட்டு உறவுமுறைகளை மிகவும் அழகாக பதிவு செய்துள்ளது. ஆனால் நமக்கு கிடைத்துள்ள பாடல்கள் எண்பது மட்டுமே ஆகும். முதல் பத்தும் இறுதி பத்தும் கிடைக்கவில்லை என்பர். மேலே குறிப்பிட்டுள்ள பத்துகளில் பரணர் - கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் அரச புலவர் உறவுகள் எவ்வாறு அமைந்துள்ளது. என்பதனை அறியும் முகத்தான் இக்கட்டுரை அமைகின்றது.

**சேரர்களின் பதிவு**

சேரர்கள் பற்றி பேசும் போது அவர்கள் இன்றைய கேரள நாட்டில் வதிந்தவர்கள் என்பர். சேரர்களை மெகசுதனி என்பார் சந்திரகுப்த வேந்தன்பால் கங்கை நாட்டு பாடலிபுத்திரத்தில் தங்கிருந்த போது சில குறிப்புகளை தருகிறார். சேரர்கள் "சேர்மா(chermae)பது சேர மான்களையும், 'நறா( narae)என்பது சேரநாட்டு வடபகுதியான குடநாட்டு நறவூரையும் குறிப்பனவாகும்"[1] என்பர். "கி.பி 126 – 61ல் வாழ்ந்த தாலமி(Ptolemy) என்பார் எழுதியுள்ள குறிப்பில் சேரவேந்தர் கேரளபோத்திராசு(carelabothras) என்றும், அவர்களது தலைநகர் 'கரவ்ரா'(karoura) என்றும் குறிக்கப்படுவது காண்கிறோம். இது கருவூர் என்பதன் திரிபு. இக்கருவூர் இப்போது வஞ்சி நகர்க்கு வடக்கில் எட்டுக் கல் அளவில் கடற்கரையில் உளது"[2] என்பர். கி.பி இரண்டாம் நூற்றாண்டில் மேலைக் கடற்கரைப் பகுதிக்கு வந்து சென்ற யவன அறிஞரான தாலமி என்பவரது குறிப்பால் சேரநாட்டின் வடயெல்லை வானவாறும்(honawar) கிழக்கில் மலையும், தெற்கில் கொல்லத்து ஆறும், மேற்கில் கடலும் எல்லையாக இருந்தன"[3] என்று ஆராய்ச்சியாளர் உரைக்கின்றனர். ஆனால் மேனாட்டறிஞரான பிளினி(pliny) என்பாரது குறிப்பை ஆராயுங்கால், சேர நாட்டின் தென்யெல்லை இப்போதுள்ள கொள்ளமும் கோட்டாற்றுக் கரையும், எனத்தெரிகிறது. மேலும் திருவிதாங்கூரின் தென்பகுதி முற்றும் பாண்டிய நாடாகவே இருந்ததென்றும் விளங்குகிறது. பெரிப்புளுஸ் நூலாசிரியர் குறிப்பும் இம்முடிபையே வற்புறுத்துகிறது என்றும், தமிழ் சேர நாட்டின் தென்எல்லை கொல்லத்தோடு நின்றதென்பது தெளிவாகும். அந்த அறிஞர்கள் குறிக்கும் தொண்டி, முசிறி முதலியன சேரர்களைப் பாடிய சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறே வடகன்னட நாட்டில் வழங்கும் செய்திகளால் பண்டைநாளைச் சேரநாடு கோகரணத்துக்கு வடக்கேயும் பரந்திருந்தமை தெளிவாய்த் தெரிகிறது"[4]. இப்படியாக அமைந்த பகுதிதான் சேரநாடு

SAMPLE

என்று பண்டைய காலத்தில் பேசப்பட்டு வந்துள்ள கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் இமயம் முதல் தென்னங்குமரி வரை படையெடுத்து வென்றான் என்று பதிற்றுப்பத்து இதனை,

வடதிசை எல்லை இமயமாகத்
தென்னங்குமரி யொடாயிடையரசர்(பதிற்:43:7-8)

**பரணர் பாடல்கள்:**

சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்கு என்ற சங்க நூல்களுள் பரணர் பாடல்கள், எட்டுத்தொகையில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்களில் பரணர் பாடல்களைக் கொண்ட நூல்கள், நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்ற ஐந்து மட்டுமே. இவற்றுள் பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் உணர்த்துவன. ஆவற்றுள் அவர் பாடல்களாக முறையே பத்துப்பாடல்களும், பதின்மூன்று பாடல்களுமாக வந்துள்ளன. நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை ஆகிய நூல்களில் வந்துள்ள அகத்துறைப் பாடல்கள் அறுபத்திரண்டில் குறிஞ்சித் திணைப்பாடல்கள் முப்பத்து மூன்று, மருதத்திணை கூறுவன இருபத்தி நான்கு, பாலைத் திணை கூறுவன ஐந்து ஆக பரணர் பாடல்கள் எண்பத்தைந்து ஆகும்.

**பரணர் பெயர்க்காரணம்**

சங்க இலக்கிய நூல்களில் புறத்தில் அதிகமான வரலாற்றுச் செய்திகளை தரும் புலவர் பரணர் ஆவார். இவரது பாடல்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கச் செய்திகளை தருகின்றன. பரணர் பற்றிய செய்திகள் வரலாற்றில் மிகவும் அதிகமாகவே கிடைக்கின்றன. “பரணர் பலருடைய வரலாற்றினை விளங்க உரைத்துள்ளார். ஆனால் தம்முடைய வரலாற்றில் ஒருசிறு பகுதியையும் அறிய அவர் பாடல்கள் காணபுரிவன அல்ல ஆகவே புலவர்களும் போற்றும் புகழ்மிக்க பரணரைப் பெற்றுப் பெருந்தவமுடையராய்? புரணரின் பிள்ளைப் பருவப் பண்புகள் யாவை? நூல் பல கற்று நுண்ணறிவெய்தத் துணைபுரிந்த நல்லாசிரியர் யார்? அவர், அவர்களுக்க கற்றுத்தந்த நூல்கள் யாவை? பெண்ணொருத்தியை மணந்து, பேர் அறமாம் இல்லறம் பேணியவரா பரணர்? அவ்வாறாயின், மங்கலமாம் மாட்சியுடைய மனைவியர் யார்? ஆவர் இயல்பு யாது?”[5] ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் சில சான்றுகள் மூலம் அவரின் குடி வரலாற்றினை அறிய முடிகின்றது.

பரணர் பேகனைப் பாராட்டிப் பாடிய பாக்களில் சீறியாழ் செவ்வழி பண்ணி யாழிநன், காரெதிர் கானம் பாடினேம் எனவும், கருங்கோட்டுச் சீறியாழ், நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி, எனவும், சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனைப் பாராட்டியப் பாட்டில். ‘அரிசிக்குரல் தடாரி, உருப்ப ஒற்றிப் பாடிய வந்திசின் பெரும! எனவும் பாடியிருப்பதைக் கொண்டு பரணர், யாண்குடியிற் பிறந்தவர். ஆனால் பாணர் குடியிலே பிறந்து புலமையாலும், புகழாலும் பலரும் போற்ற வாழ்ந்த காரணத்தால், அக்கால மக்கள் அவரை இயற்பெயரிட்டு அழைக்க அஞ்சி, குலப்பெயரான பாணர் என்று அழைத்தனர் என்றும், பரணர் பெயர் என்பதே பாணர் என்பது அன்று என்பதற்கு ஆதாரமாக அழகிய அகச்சான்று ஒன்றும் கிடைத்துள்ளது. ஔவையார் பரணர் காலப்புலவர், அவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டிய பாட்டொன்றில் அதியமான் பரணராலும் பாராட்டப் பெற்ற பெருமையுடையவன் எனக் கூறுவர்

“பரணன் பாடினேன் மற்கொல், மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிரின்
அரணடு திகிரி எந்திய தோனே” (புறம்.18)

முத்தரசி
2023
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

இப்பாட்டில் முரண்மிகு, அரணடு என்ற சொற்களுக்கேற்ப எதுகைத் தொடையாகப் பரணன் என்பதே பொருந்துவதாக உள்ளது. பாணன் என்பது பொருந்தாமை அறிக"[6] என்கிறார் கா.கோவிந்தன்.

**சேரன் செங்குட்டுவன்**

பதிற்றுப்பத்தில் குறிப்பிடும் கடல்பிறகோட்டிய செங்குட்டுவனும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் சேரன் செங்குட்டுவனும் ஒருவனே. என்றும் குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் இவனின் தந்தையாவான். சோழன் மணக்கிள்ளி என்பவள் இவளது தாய் ஆவாள்"[7]என்கின்றனர். ஆனால் சோழன் மணக்கிள்ளி பெற்றெடுத்த மகள் ஈன்ற மகன் செங்குட்டுவன் ஆவான்"[8]. சங்க காலத்தில் புலவர்கள் அரசனுக்கு நெருங்கிய உறவுடையவராகவும், அரசனை இடித்துரைக்கும் பண்பும் புலவருக்கு இருந்திருக்கிறது. பண்டைக் காலத்தில் அமைச்சர், புலவர் பற்றிய செய்திகள் அதிகம் இருப்பினும் அரசனுக்குறிய ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் தான் இடம்பெறுகிறது.ஆனால் எட்டுத்தொகைப் பத்துப்பாட்டில் இடம்பெறவில்லை எனலாம். அரசன் புலவர்களை பார்ப்பதற்கு என்று நேரம் ஒதுக்கி வந்தான்.அரசன் ஒவ்வொரு நாளும் பெரும்பாலும் நிகழ்ச்சி நிரலின்படி தன் வேலைகளை நடத்தி வந்தான். ஒவ்வொரு பகுதியும் நான்கு மணி வீதம் ஒரு பகல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதற்பகுதி அறத்தின் வழிக் கழிக்கப்பட்டது. இரண்டாம் பகுதி ஆட்சி வேலைகளுக்காகச் செலவிடப்பட்டது. மூன்றாம் பகுதி புலவர்களைச் சந்திக்கவும் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கவும் கழிக்கப்பட்டது"[9] என்பார் மர்இராசமாணிக்கனார். ஆனால் பதிற்றுப்பத்தில் குழுக்கள் பற்றி கூறும் போது " குழுநிலை" (பதிற்.49:9) என்ற சொல் பதிவாகிவுள்ளது.

**அரசனின் கொடை**

பழைய காலந் தொட்டே சமுதாயம் தனி மனிதனை அரசாளவிட்டதாகத் தெரியவில்லை. ஆட்சித் துறையில் அவனுக்கு உதவிபுரிய அரசியல் மேதைகளும், சான்றோரும், நாட்டுப் பிரதிநிதிகளும் இருந்து வந்தனர் என்று கருதுவது பொருத்தமாகும். கடிந்து அறிவுரை கூறும் அறிஞர் துணை அரசனுக்குத் தேவை. அப்பொழுதுதான் அவன் காவலையுடைய அரசனாவான். அத்தகைய காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லாமலே கெட்டுவிடுவான் என்பது வள்ளுவரின் கருத்தாக அமைகின்றது. இதனை,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கொடுப்பா ரிலானுங் கெடும்"(குறள்:448)

என்று குறிப்பிடுகிறார்.

சேரன் செங்குட்டுவன் புகழ்ந்து பாடும் பரணர். அரசன் மக்களுக்கு என்ன என்ன பொருள்களைக் கொடுத்தான் என்பதனை,

"அட்டானானே குட்டுவன் அடுதொறும்
பெற்றானாரே பரிசிலர் களிறே" (பதிற்.47:1-2)

என்றும்,

"பைம்பொன் தாமரைப் பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டிச்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர் புக்குக்
........................................................................
........................................................................

பொழில் வதிவேனில் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமொடு உண்டினிது நுகரும்" (பதிற்.48:1-17)

என்று குறிப்பிடுகிறது. விறலியர்க்கு பொன்னால் ஆன தாமரைப் பூவை சூட்டிய முத்துமாலையும், உணவும் அரசனால் வெற்றிக் கொண்ட பொருட்கள் அனைத்தையும் மக்களுக்கு கொடுத்துவிடுகிறான்.ஆனால் அரசன் இறந்தால் அவனை புதைப்பதற்கு என்று தாழிகள் சேரநாட்டிலும் பயன்பாட்டில் இருந்திருக்கிறது. என்பதனை,

"துளங்குநீர் வியலகம் ஆண்டினிது கழிந்த
மன்னர் மறைந்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே" (பதிற்.42:21-23)

என்றும், அரசன் பகைவேண்டி வேற்று நாடு சென்று பிறகு மீண்டும் இருப்பிடம் சேர்ந்த வெற்றி வீரர்களுக்கு கள் கொடுத்து அவர்களை மகிழ்வித்தான். அந்த அளவிற்கு அரசர்களும் மக்களும் வீரரும் இருந்துள்ளனர். இதனை,

"சாந்துபுறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கைத்
தீஞ்சோறு விளைந்த மணிநிற மட்டம்" (பதிற்.42:11-12)

என்கிறது.

**பரணர் பெற்ற பரிசு**

செந்தமிழ் வளஞ்சிறந்து திகழும் பரணருடைய நல்லிசைப் புலமையின்பால் செங்குட்டுவனுக்கு மிக்க விருப்பமுண்டாயிற்று. அவரைக் கொண்டு தமிழ் இளைஞர்க்கு அகமும் பொருளுமாகிய பெருநூல்களை அறிவுறுக்குமாறு ஏற்பாடு செய்தான். அதற்காகச் சேர நாட்டு உம்பற்காடு என்ற பகுதியின் வருவாயைப் பரணற்கு நல்கித் தன் மகன் குட்டுவன் சேரல் என்பவனை அவர்பால் கையடைப்படுத்திக் கல்வி கற்பிக்குமாறு செய்தான். பிற்காலத்தே சேர நாட்டுக் கானப்பகுதியொன்று பரணன் கானம் என்ற பெயரெய்தி இன்றும் திருவிதாங்கூர் நாட்டில் மினச்சில் பகுதியில் உள்ளது"[10] என்கிறார். ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.

பதிற்றுப்பத்தில் தன்னைப் பாடிச் சிறப்பித்த பரணர் என்னும் புலவர்க்கு உம்பற்காடு என்னும் பகுதியில் அரசுக்குக் கிடைத்த வருவாய் அனைத்தையும் கொடுத்தான். அதனுடன் இவனது அருமை மகன் குட்டுவன் சேரல் என்னும் பெயர் கொண்டவனைப் புலவர்க்குப் பணிவிடை செய்வற்கென்று அனுப்பி வைத்தான். வடநாட்டு வெற்றிக்குப்பின் கங்கையாற்றின் தென்கரையில் பாடி வீடமைத்துத் தங்கியிருந்த போது தமிழ்நாட்டிலிருந்து வந்த மாடலன் என்னும் மறையவனுக்குத் தன் எடைக்கு எடை பொன் கொடுத்தான் என்ற செய்திச் சிலப்பதிகாரத்தில் அறியலாம் என்பர் மயிலை. சீனி. வேங்கடசாமி.[11]

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் பரணரால் பாடப்பட்ட மன்னர்களில் சிறப்பிற்கு உரியவன் கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் ஆவான். இவன் கடற்போரில் சிறந்தனவாக இருந்தமையால் தான் இவனுக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஓர் அரசன் புலவர்களுக்கு நிலம், பொன், பொருள், உடைமைகள் கொடுத்திருப்பதனை அறிந்திருக்கலாம். ஆனால் புலவனுக்காக பணிவிடை செய்வதற்கும், நூல்கள் கற்பதற்கும் அரசன் தன் மகனையே தானமாக கொடுத்திருக்கின்றான் என்றால் இதனைவிடச் சிறந்த கொடையும் உண்டோ என்னும் அளவிற்கு என்னத் தூண்டுகிறது. புலவனின் பின்புலம் தெரியவில்லை என்றாளும் புலவனுக்கும் அரசனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது என்பதனை பரணர் இயற்றிய ஐந்தாம் பத்தின் மூலம் அறியமுடிகின்றது.

SAMPLE

முத்தரசி
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

**அடிக்குறிப்புகள்:**

1.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை சேரமன்னர் வரலாறு ப.55

2.மேலது, ப.59

3.மேலது, ப.21

4.மேலது, ப.23

5.கா.கோவிந்தன், சங்க தமிழ்ப்புலவர்வரிசை பரணர் ப.7

6.மேலது ப.11

7.மயிலை சீனி.வேங்கடசாமி, பண்டையத் தமிழக வரலாறு-சேரர் சோழர் பாண்டியர் ப.54

8.அ.மாணிக்கம்,(உ.ஆ) பதிற்றுப்பத்து ப.259

9.மா.இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி.ப.42

10.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, சேரமன்னர் வரலாறு பக்.197-198

11.மயிலை சீனி.வேங்கடசாமி, பண்டையத் தமிழக வரலாறு-சேரர் சோழர் பாண்டியர் ப.64

SAMPLE